செய்தி வெளியீடு எண்: 079 நாள்: 31.01.2018

**தமிழ்நாடு அரசு**
**வணிகவரி மற்றும் பதிவுத் துறை**
**உள் மாநில சரக்குப் போக்குவரத்திற்கு மின் வழிச் சீட்டு பிப்ரவரி 1, 2018 முதல் கட்டாயமாக்கப்படுகிறது**

தடையில்லா சரக்குப் போக்குவரத்தினை உறுதி செய்யும் பொருட்டு பிப்ரவரி 1, 2018 முதல் மின் வழிச் சீட்டு கட்டாயமாக்கப்படுகிறது. சரக்கு மற்றும் சேவை வரிக்கு உட்பட்ட, ரூ.50,000/- மேல் மதிப்புள்ள வரி அல்லது வரி விலக்கு பெற்ற சரக்குகளின் நகர்வுகள் சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள ஆவணங்களான விலைப் பட்டியல் (அல்லது) வழங்குகைப் பட்டியல் (அல்லது) ஒப்புகைச் சீட்டு உடன், மின் வழிச் சீட்டு அல்லது மின் வழிச் சீட்டு எண்ணுடன் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்த முறையானது சுய உறுதி ஆவண மாதிரியில் செயல்படும். பொருள் வழங்குபவர் அல்லது பொருள் பெறுபவர் அல்லது சரக்குப் போக்குவரத்தினை மேற்கொள்பவர் மின் வழிச் சீட்டினைப் படியுருவாக்கம் செய்து கொள்ளலாம். மின் வழிச் சீட்டினை www.ewaybillgst.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்தோ அல்லது கைப்பேசி செயலி அல்லது குறுஞ்செய்தி மூலமாகவோ படியுருவாக்கம் செய்து கொள்ளமுடியும். மின் வழிச் சீட்டு; முறைக்குத் தேவையான விதிகள் (தமிழ்நாடு சரக்கு மற்றும் சேவை வரி விதிகள் 138 முதல் 138D வரை) ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து வரி செலுத்துவோர்களும் 01.02.2018 முதல் சரக்கு போக்குவரத்து மேற்கொள்ளும்போது சரக்கு மற்றும் சேவை வரி சட்டத்தின் கீழ் கூறப்பட்ட ஆவணங்களான விலைப்பட்டியல் அல்லது வழங்குகைப் பட்டியல் அல்லது ஒப்புகைச் சீட்டு உடன் மின்வழிச்சீட்டினை www.ewaybillgst.gov.in இணையதளம் மூலம் படியுருவாக்கம் செய்யுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

சந்தேகங்கள் மற்றும் விளக்கங்களுக்காக உரிய வரிவிதிப்பு வட்டங்களைத் தொடர்பு கொள்ளலாம். கீழ்க்காணும் உதவி மையம் மூலமாகவும் கீழ்க்காணும் தொடர்புகளில் விவரங்களைப் பெறலாம்.

| | | |
|---|---|---|
| உதவி எண் | : | 044-28290962 |
| இலவச அழைப்பு எண் | : | 1800 103 6751 |
| மின்னஞ்சல் முகவரி | : | helpdesk@ctd.tn.gov.in |

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**